2009 ஜூலை 7]

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்கள்.

***திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2009–2010 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 3–7–2009 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை மற்றும் அதன்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) மற்றவையெல்லாம் பின்னால் பார்ப்போம் என்று சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரம் இல்லை. We have no time. Please, we will take it tomorrow. No, no. (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் நேரம் எல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.